Tamil

Administrative Appeals Tribunal

தகவல் ஏடு

# பாதுகாப்பு விசா இரத்துகள்

பாதுகாப்பு விசா ஒன்றை இரத்து செய்ய 'உள்நாட்டு விவகாரத் திணைக்களம்' ('திணைக்களம்') மேற்கொண்ட முடிவினை மீள்பரிசீலனை செய்வது குறித்த கேள்விகளுக்கு இந்தத் தகவல் ஏடு பதிலளிக்கிறது.

## AAT எதைப் பற்றி முடிவு செய்ய வேண்டும்?

விசா இரத்து செய்யப்படுவதற்கான காரணங்கள் சொல்லப்பட்டுள்ளனவா என்பதையும், அப்படியென்றால் விசா இரத்து செய்யப்படலாமா என்பதையும் AAT தீர்மானிக்க வேண்டியிருக்கும்.

வெவ்வேறு பல வழிவகைகளின் கீழ் பாதுகாப்பு விசா ஒன்று இரத்து செய்யப்படக்கூடும். கீழ் வரும் காரணங்களின் அடிப்படையில் இரத்து செய்யப்படும் பாதுகாப்பு விசா ஒன்றைப் பற்றிய தகவல்களை இந்தத் தகவல் ஏடு அளிக்கிறது:

- 'திணைக்கள'த்திற்குச் சரியான தகவல்கள் (உதாரணமாக: விசா விண்ணப்பங்கள், 'பயணி அட்டை'கள் போன்றவற்றில்) மற்றும் உண்மையான ஆவணங்களைக் கொடுக்க வேண்டும் என்ற 'புலப்பெயர்வு சட்ட'(Migration Law)த் தேவைப்பாடுகளுடன் **உடன்படாமை**

  அல்லது

- விசா தற்காலிகமானதாக இருக்கும் தருணத்தில், பின் வருவது போன்ற சில **குறிப்பிட்ட சூழ்நிலை சார்ந்த காரணங்கள்**:
  - தற்போது நடப்பில் இல்லாத குறிப்பிட்ட ஒரு விடயம் அல்லது சூழ்நிலை ஒன்றின் காரணமாக கொடுக்கப்பட்ட விசா
  - விசாவின் நிபந்தனை ஒன்றிற்கு உடன்படாதிருத்தல்
  - ஆஸ்திரேலிய சமூகத்தின் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் நல்லொழுங்கு ஆகியவற்றிற்கு, அல்லது தனிநபர்களின் சுகாதாரம் அல்லது பாதுகாப்பிற்கு நீங்கள் ஒரு ஆபத்தாக

இந்தத் தகவல் ஏடு பொதுவான தகவல்களை மட்டுமே அளிக்கிறது. உங்களுடைய வழக்கைப் பற்றிய சட்டப்படியான அறிவுரை அல்ல இது. சட்ட விடயம் ஒன்றைப் பற்றி அல்லது சட்டம் உங்களுடைய வழக்கிற்கு எப்படிப் பொருந்தும் என்பதைப் பற்றிய கேள்வி ஒன்று உங்களுக்கு இருந்தால், நீங்கள் சட்ட உதவியை நாடவேண்டும்.

இருக்கும் பொழுது அல்லது பொதுப் பாதுகாப்பிற்கு ஒரு ஆபத்தாக நீங்கள் இருக்கும் பொழுது.

குறிப்பு: நன்னடத்தைச் சோதனைக் காரணங்களின் அடிப்படையில் விசா ஒன்றை இரத்து செய்வதற்கான முடிவின் மீள்பரிசீலனைக்கு இந்தத் தகவல் ஏடு பொருந்தாது.

## என்னுடைய விசா இரத்து செய்யப்படவேண்டுமா என்று AAT எப்படி முடிவு செய்யும்?

**முதல் நிலை**: இரத்திற்கான காரணங்கள் சொல்லப்படுள்ளனவா என்று AAT தீர்மானிக்க வேண்டும்

→

**இரண்டாம் நிலை**: விசா இரத்து செய்யப்படுவதற்கான காரணங்கள் சொல்லப்பட்டுள்ளன என்று AAT திருப்திப்பட்டால், உங்களுடைய விசா இரத்து செய்யப்பட வேண்டுமா என்பதை AAT கருத்தில் கொண்டாகவேண்டும்.

உங்களுடைய விசாவை இரத்து செய்வதற்கு முன்பாக, இரத்து செய்வதைக் கருத்தில் கொள்வதற்கான உத்தேசத்தைப் பற்றிய அறிவிப்பு ஒன்றை உங்களுக்குத் 'திணைக்களம்' கொடுத்திருக்க வேண்டும் மற்றும் அதற்கு உங்களுடைய மறுமொழியை அளிக்க உங்களை அழைத்திருக்க வேண்டும். விசாவை இரத்து செய்வதற்கான காரணங்கள் சொல்லப்பட்டுள்ளனவா என்று முடிவு செய்வதில், இந்த அறிவிப்பிற்கான உங்களுடைய மறுமொழியை AAT கருத்தில் கொள்ளும். உங்களுடைய மறுமொழியில் நீங்கள் தவறான தகவல்களையோ, போலி ஆவணங்களையோ கொடுத்தால், 'புலப்பெயர்வு சட்ட'த்திற்கு உடன்படாமை எனும் தருணமும் நிகழலாம்.

AAT நோக்கக்கூடிய விடயங்களில் பின்வருவன உள்ளடங்கும்:

*தவறான தகவல்கள்/போலி ஆவணங்கள் காரணமாக உங்களுடைய விசா இரத்து செய்யப்பட்டிருக்கும் பொழுது (உடன்படாமை).*

- சரியான தகவல்கள்
- எவ்வொரு உண்மையான ஆவணத்திலும் உள்ள அடக்கங்கள்
- நீங்கள் கொடுத்த தவறான தகவல்/போலி ஆவணத்தின் அடிப்படையில் விசா வழங்குவதற்கான முடிவு எடுக்கப்பட்டதா, அப்படி இருந்தால், எந்த சூழ்நிலையில் அது கொடுக்கப்பட்டது, மற்றும் அந்த நேரத்திலிருந்து இதுவரை எவ்வளவு காலம் கடந்துள்ளது
- உங்களுடைய தற்போதைய சூழல்கள்.
- பாதுகாப்பு விசாவில் நீங்கள்

இருந்த பொழுது செய்யப்பட்ட சட்ட மீறல்கள் எதுவும்
- சமூகத்திற்கு நீங்கள் செய்துள்ள பங்களிப்பு எதுவும்
- உங்களுடைய சொந்த நாட்டிற்கு நீங்கள் திருப்பி அனுப்பப்பட்டால், உங்களுக்கு ஏற்படக்கூடிய தீங்கு எதுவும்
- விசா இரத்து செய்யப்படுவதால் உங்களுடைய குடும்பத்திற்கு ஏற்படும் கஷ்டங்கள்.

*குறிப்பிட்ட சூழ்நிலைகள் குறித்த காரணமாக விசா இரத்து செய்யப்படும் பொழுது:*

- நீங்கள் ஆஸ்திரேலியாவிற்கு ஏன் வந்தீர்கள், மற்றும் பாதுகாப்பு விசாவிற்கான உங்களுடைய விண்ணப்பத்தினை ஏன் இட்டீர்கள்
- உங்களுடைய விசா நிபந்தனைகளுக்கு நீங்கள் கட்டுப்பட்டிருக்கிறீர்களா, மற்றும் 'திணைக்கள'த்துடன் உண்மையாகவும், ஒத்துழைப்பாகவும் இருந்துவந்திருக்கிறீர்களா
- விசா இரத்து செய்யப்பட்டால் உங்களுக்கும், உங்களுடைய குடும்பத்திற்கும் ஏற்படும் கஷ்டத்தின் அளவு
- வழக்கின் சூழல்கள்.

*அனைத்துத் தருணங்களிலும்:*

- சட்டம் சார்ந்த பின்விளைவுகள் அல்லது பின்விளைவாக ஏற்படக்கூடிய விசா இரத்துகள்
- உங்களுடைய சொந்த நாட்டிற்கு நீங்கள் அகற்றப்பட்டால் சர்வதேசக் கடப்பாடுகள் எதுவும் மீறப்படுமா
- மற்ற ஏற்புடைய விடயங்கள் எதுவும்.

விசாவை இரத்து செய்யலாமா என்பதை முடிவுசெய்யும் பொழுது AAT கருத்தில் கொள்ளக்கூடிய விடயங்களின் வகைகளை அடையாளம் காண்பதற்கு 'திணைக்கள'த்தின் முடிவு குறித்த கடிதம் உங்களுக்கு உதவியாக இருக்கலாம்.

## என்னுடைய மீள்பரிசீலனைக்கு ஆதரவாக இருக்கும் வகையில் AAT -யிற்கு நான் என்ன தகவல்களைக் கொடுக்கலாம்?

உங்களுடைய வழக்கிற்கு ஆதாரமான தகவல்களை நீங்கள் கொடுக்கலாம். கிழே பட்டியலிடப்பட்டுள்ள தகவல்களுக்கு அப்பாற்பட்ட தகவல்களையும் நீங்கள் கொடுக்கலாம், நீங்கள் கொடுக்கும் தகவல்கள் உங்களுடைய

இந்தத் தகவல் ஏடு பொதுவான தகவல்களை மட்டுமே அளிக்கிறது. உங்களுடைய வழக்கைப் பற்றிய சட்டப்படியான அறிவுரை அல்ல இது. சட்ட விடயம் ஒன்றைப் பற்றி அல்லது சட்டம் உங்களுடைய வழக்கிற்கு எப்படிப் பொருந்தும் என்பதைப் பற்றிய கேள்வி ஒன்று உங்களுக்கு இருந்தால், நீங்கள் சட்ட உதவியை நாடவேண்டும்.

தனிப்பட்ட சூழல்களைப் பொறுத்ததாக இருக்கும்.

ஆதாரம் என்பது உங்களுடைய கோரிக்கைகளுக்கு ஆதரவாக இருக்கும் எவ்வொரு ஏற்புடைய ஆவணங்களையும் குறிக்கும். நீங்கள் கொடுக்கும் ஒரு வாக்குமூலத்தை, அல்லது உங்களுடைய குடும்ப அங்கத்தவர்கள் போன்ற மற்றவர்களுடைய வாக்குமூலங்களை இது உள்ளடக்கும்.

எமக்குக் கொடுப்பதற்கான உபயோககரமான தகவல்களுக்கான உதாரணங்களில் பின் வருவன உள்ளடங்கும்:

- தவறான தகவல்கள் அல்லது போலி ஆவணங்களை நீங்கள் கொடுக்கவில்லை என்பதற்கான ஆதாரம்
- பாதுகாப்பு விசாவை இரத்து செய்ததற்கான காரணங்கள் தவறானவை என்பதற்கான ஆதாரம்
- விசா இரத்து செய்யப்படக்கூடாது என்ற கோரிக்கைகள் எதற்கும் ஆதாரமாக இருக்கும் சான்றுகள், AAT நோக்கும் விடயங்களைக் கருத்தில்கொண்டு இந்த சான்றுகள் அமையும்
- உங்களால் அல்லது உங்களுடைய பிரதிநிதியால் அளிக்கப்படும் சமர்ப்பணங்கள்.

## என்னைப் பற்றிய தகவல்களை AAT -யிற்கு நான் எப்போது கொடுக்கவேண்டும்?

தகவல்களைக் கூடிய விரைவில் நீங்கள் எமக்குக் கொடுக்கவேண்டும், உங்களுடைய விண்ணப்பத்தினைத் தாக்கல் செய்யும்போது நீங்கள் அவற்றைக் கொடுத்தால் நல்லது. நீங்கள் எமக்குக் கொடுக்கும் தகவல்களில் AAT திருப்திப்பட்டால், வழக்கு-விசாரணை ஒன்றிற்கான தேவை இல்லாமல் சாதகமான முடிவு ஒன்று இயலுமாகலாம்.

### *வழக்கு-விசாரனை ஒன்றில் சாட்சியம் அளித்தல்*

வழக்கு-விசாரணை ஒன்றிற்கு வருமாறு நீங்கள் வேண்டப்பட்டால், AAT அங்கத்தவர் ஒருவர் உங்களுடைய விண்ணப்பத்தினைப் பற்றி உங்களைக் கேட்பார், அத்துடன் நீங்கள் முன்-வைக்கும் அனைத்துத் தகவல்களையும் கருத்தில் கொள்வார். பொதுவாக, உங்களுடைய வழக்கினைப் பற்றி நீங்கள் எமக்குக் கொடுத்திருக்கும் ஆவணங்களை இது உள்ளடக்கும். வழக்கு-விசாரணைக்கு 7 நாட்களுக்கு முன்பாக எவ்வொரு தகவலையும் நீங்கள் எமக்குக் கொடுக்கவேண்டும், அல்லது குறிப்பிட்ட ஒரு திகதியன்று தகவல்களை எமக்குக் கொடுக்குமாறு நாங்கள் கேட்டால், நாங்கள் சொல்லும் திகதிக்குள் நீங்கள் அத் தகவல்களைக் கொடுக்கவேண்டும்.

AAT அங்கத்தவருக்கு நீங்கள் கொடுக்கும் எவ்வொரு தகவலும் முக்கியமான ஆதாரமாகும். வழக்கு விசாரணைக்கு முன்பாகவே இந்த ஆதாரங்களை ஆயத்தம் செய்வது உங்களுடைய வழக்கினை நீங்கள்

இந்தத் தகவல் ஏடு பொதுவான தகவல்களை மட்டுமே அளிக்கிறது. உங்களுடைய வழக்கைப் பற்றிய சட்டப்படியான அறிவுரை அல்ல இது. சட்ட விடயம் ஒன்றைப் பற்றி அல்லது சட்டம் உங்களுடைய வழக்கிற்கு எப்படிப் பொருந்தும் என்பதைப் பற்றிய கேள்வி ஒன்று உங்களுக்கு இருந்தால், நீங்கள் சட்ட உதவியை நாடவேண்டும்.

முன்-வைப்பதற்கு உங்களுக்கும், முடிவு ஒன்றை மேற்கொள்ள அங்கத்தவருக்கும் உதவலாம்.

## உங்களுக்குக் கேள்விகள் ஏதும் இருந்தால் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்

- தொலைபேசி: **1800 228 333**
- **மின்னஞ்சல்**: mrdivision@aat.gov.au
- www.aat.gov.au
- நேஷனல் ரிலே சர்வீஸ் www.relayservice.gov.au
- மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு சேவை (TIS) 131 450

*இந்தத் தகவல் ஏடு "நீங்கள்" என்று சொல்லும் இடங்களில் அது விண்ணப்பதாரியைக் குறிக்கும், மற்றும் அவரால் பெயர்மொழியப்பட்டவர், அவரது பிரதிநிதி அல்லது அவரது ஆதரவுதவியாளரை உள்ளடக்கும். இந்தத் தகவல் ஏடு "நாம்" "எமக்கு" என்று சொல்லும்போது அது AAT-யைக் குறிப்பதாக இருக்கும்.*

இந்தத் தகவல் ஏடு பொதுவான தகவல்களை மட்டுமே அளிக்கிறது. உங்களுடைய வழக்கைப் பற்றிய சட்டப்படியான அறிவுரை அல்ல இது. சட்ட விடயம் ஒன்றைப் பற்றி அல்லது சட்டம் உங்களுடைய வழக்கிற்கு எப்படிப் பொருந்தும் என்பதைப் பற்றிய கேள்வி ஒன்று உங்களுக்கு இருந்தால், நீங்கள் சட்ட உதவியை நாடவேண்டும்.